DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , MANNARGUDI
**Sessions Case No. 45/2014**

(Preliminary Register : 3/2014 )
Prosecution of Witness அ.சா. 15 ன் வாக்குமூலம்

List of Witness No.16

| | | | |
|---|---|---|---|
| NAME: | குமார் | FATHER'S NAME: | கார்த்திகேயன் |
| VILLAGE: | | TALUK: | |
| CASTE: | | CALLING: | காவல் ஆய்வாளர், IUCAW, வேலூர் |
| RELIGION: | | AGE: | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **16.03.2026.**

**முதல் விசாரணை** :-

நான் தற்போது வேலூர் மாவட்டம், IUCAW ல் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான், இதற்கு முன்பு களப்பால் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது எனக்கு முன்னால், இருந்த காவல் ஆய்வாளர் மகேஷ் அவர்கள் களப்பால் காவல்நிலைய குற்ற எண். 18/2013, பிரிவுகள் 294(பி), 324, 307 இதச வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டிருந்தார். மேற்சொன்ன காவல் ஆய்வாளர் மகேஷ் இறந்துவிட்டார். அவருடன் பணிப்புரிந்த வகையில் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். காவல் ஆய்வாளர் மகஷே, சம்பவ இடமான கீழப்புதூர் கிராமம் வழக்கின் புகார்தாரர் சுப்ரமணியன் என்பவர் வீட்டின் அருகில் சம்பவ இடத்தினை 14.06.2013 ம் தேதியன்று 13.00 மணிக்கு சம்பவ இட சாட்சிகள் தனசேகரன் மற்றும் காத்தமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.17** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.18** ஆகும். மேலும், சம்பவத்தன்று 12.30 மணிக்கு சம்பவ இட அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சுமார் 60 செ.மீ நீளமுள்ள 4 துளைகள் கொண்ட வளைந்த முனை மற்றும் மெலிந்த சிமிண்ட் கலர் Sun Direct குடை ஒன்றும் சுமார் 43.5 செ.மீ நீளமுள்ள அதில் 12 செ.மீ மரக்கைப்பிடி மற்றும் 3.5 செ.மீ பூணுடன் கூடிய முனை வளைந்த அருவாள் ஒன்றும் சுமார் 33 செ.மீ நீளமுள்ள 8 செ.மீ நீளமுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய முனை வளைந்த அருவாள் 1ம், சுமார் 62.5 செ.மீ நீளமும் 4.6 விட்டமும் உள்ள சவுக்கு கட்டை 1ம், சம்பவ இடத்தில் எதிரிகள் விட்டுச் சென்றதை கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.19** ஆகும். 60 செ.மீ நீளமுள்ள 4 துளைகள் கொண்ட வளைந்த முனை மற்றும் மெலிந்த சிமிண்ட் கலர் **Sun Direct குடை சா.பொ.1** ஆகும். சுமார் 43.5 செ.மீ நீளமுள்ள அதில் 12 செ.மீ மரக்கைப்பிடி மற்றும் 3.5 செ.மீ பூணுடன் கூடிய முனை வளைந்த **அருவாள் சா.பொ.2** ஆகும். சுமார் 33 செ.மீ நீளமுள்ள 8 செ.மீ நீளமுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய முனை வளைந்த **அருவாள் சா.பொ.3** ஆகும். சுமார் 62.5 செ.மீ நீளமும் 4.6 விட்டமும் உள்ள **சவுக்கு கட்டை சா.பொ.4** ஆகும். பின்னர் வழக்கு சம்மந்தமான சாட்சிகள் சுப்ரமணியன், சுரேஷ்மேனன், கோட்டையம்மாள், சூர்யா, கோவிந்தன், ராணி, குமார், ராஜமாணிக்கம், தனசேகர், காத்தமுத்து ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 14.06.2013 ம் தேதியன்று மீனம்பநல்லூர் கடைத்தெருவில் நின்றுக்கொண்டிருந்த எதிரகிள் ராஜரெத்தினம் மற்றும்

அருள்தாஸ் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம்பட்ட சுப்ரமணியன், சூர்யா, கோட்டையம்மாள், சுரேஷ்மேனன் ஆகியோர்களுக்கு மன்னார்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் தினேஷ்குமார் அவர்கள் முதல் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளார். தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் இராதாகிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயத்தின் தன்மை குறித்த சான்றிதழ் பெற்றும் பின்னர் 16.12.2013 ம் தேதியன்று இவ்வழக்கில் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307 இதசவிலிருந்து சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 326, 307 உ/இ 34 இதசவாக மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். **பிரிவு மாற்றறிக்கை அ.சா.ஆ.20** ஆகும். பின்னர் 1ம் எதிரி, 2ம் எதிரி, 4ம் எதிரி ஆகியோர்கள் மீது பிரிவு 294(பி), 324, 307 உ/இ 34 இதசவின் கீழும் 3ம் எதிரியின் மீது பிரிவு 294(பி), 324, 326, 307 இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

எனக்கு முந்தைய ஆய்வாளர் தாக்கல் செய்த ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் - சரிதான். சம்பவம் குறித்தோ, கைப்பற்றப்பட்ட தடயங்கள் குறித்தோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் - சரிதான். 1 முதல் 4 எதிரிகள் எந்த குற்றத்திலும் ஈடுபடவில்லை என்றும் புகார்தாரர் கொடுத்த பொய்யான தகவலின் பேரில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் கீழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. எதிரிகள் எந்த ஆயுதங்களையும் கொண்டு தாக்கவில்லை என்றும் ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. 13.06.2013 ம் தேதியன்று எதிரிகளால் எந்த குற்ற சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு நடந்ததாக எனக்கு முந்தைய ஆய்வாளர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. புகார்தாரர் மேல் எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் குற்றவியல் நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டு தண்டத்தொகை கட்டிச் சென்றுள்ள விவரம் தெரியுமா என்றால் - தெரியாது. புகார்தாரர்கள் மீது கொடுக்கப்பட்ட புகாருக்கு பழி வாங்கும் நோக்கத்தில் போடப்பட்ட பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. தடயப்பொருட்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக சேர்க்கப்பட்டவை என்றும் வழக்கு ஆயுதங்களை கொண்டு எதிரிகள் தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால்- சரியல்ல. தடயப்பொருட்கள் என்று எதுவும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் - சரியல்ல. நடக்காத ஒரு சம்பவத்தை எதிரிகள் நடத்தியதாக தெரிவித்து எதிரிகள் மீது பொய்யான புகாரின் அடிப்படையில் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் - சரியல்ல. எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும் அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
உதவி அமர்வு நீதிபதி
மன்னார்குடி.